[2002 அக்டோபர் 29

வினா எண் 50, திரு. கே. எஸ். தென்னரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

50—

கலைக் கல்லூரி

*13152—**திரு. கே. எஸ். தென்னரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவெடுத்து உள்ளது. எனவே, ஈரோட்டில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் எண்ணம் ஏதும் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.'

என்பது குறள். வள்ளுவரின் இந்த வாக்கிற்கேற்ப, கல்வி என்ற கல்வித் திட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் முனைப்போடு செயலாற்றுகின்ற வகையிலே, ஒரே நாளில் 3080-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பணி நியமனம் செய்தும், 67 கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களோடு இணைத்து, உறுப்புக் கல்லூரிகளாக்கியும், ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஈரோடு சிக்கையா நாயக்கர் கல்லூரி என்பது 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பில், 72 ஆசிரியர்களையும், 44 பணியாளர்களையும், 1300 மாணவர்களையும்

2002 அக்டோபர் 29]

கொண்டு நடந்து வருகின்றது. தந்தை பெரியார் அவர்கள் இந்தக் கல்லூரியின் தலைவராக இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி இருக்கும்போது, ஒரு மாதத்திற்கு 16 இலட்சம் ரூபாயை அரசு இந்தக் கல்லூரிக்காகச் செலவு செய்துகொண்டிருக்கிறது. ஓர் ஆண்டுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாயும், இதுபோக இன்னும் பல்வேறு இனச் செலவுகளுக்காக, ஓர் ஆண்டுக்கு 2 கோடி ரூபாயும் அரசு அந்தக் கல்லூரிக்காகச் செலவு செய்துகொண்டிருக்கிறது. அரசு இந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்வதன் மூலமாக ஒரு பைசாகூட அரசுக்குக் கூடுதல் செலவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். 1976-ல் இயற்றப்பட்ட சட்டத்தின் பிரிவு 14(ஏ)-ன்படி கோவை மாவட்டக் கல்வி இணை இயக்குநர் 19-12-2000-ல் கல்லூரி தனி அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார்கள். சட்டப்படி தனி அலுவலரின் பொறுப்பில் 2 ஆண்டுகள் மட்டுமே ஒரு கல்லூரி இருக்க முடியும். நீட்டிப்புச் செய்ய இயலாது என்று சட்டம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, 18-12-2002-உடன் 2 ஆண்டுகள் தனி அலுவலரின் பதவிக் காலம் முடிகிற நேரத்தில் அரசு இந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்வதனாலே, அரசுக்கும் இழப்பு இல்லை; பெரியார் மாவட்டத்தில் இருக்கும் மாணவர்களுக்கும், பெரியார் மாவட்ட மக்களுக்கும் ஒரு அரசுக் கல்லூரி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்க வேண்டுமாய்த் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் கல்வித் துறையில் பல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஈரோட்டில் உள்ள சிக்கையா நாயக்கர் கல்லூரியை அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஒரு வேண்டுகோளை வைத்து இருக்கிறார்கள். சிக்கையா நாயக்கர் கல்லூரியானது ஒரு தனியார் கல்லூரி, அது அரசினுடைய உதவி பெற்றுச் செயல்படுகிற ஒரு கல்லூரியாகும். அதிலேயுள்ள சில நிர்வாகச் சீர்கேடுகள் அதிகமானதன் காரணமாக, அரசானது ஒரு தனி அலுவலரை நியமித்து இப்போது அந்தக் கல்லூரியை நடத்தி

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வருகிறது. இன்னும் 2 மாதங்களுக்குள்ளாக அந்தத் தனி அலுவலருடைய பதவிக் காலம் முடிவடைகிறது. ஆகவே, வினாவில் அவர் விரும்புவது: அதற்குப் பிறகு அரசு அந்தக் கல்லூரியை எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் வைக்கின்றார். இதில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 51, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

51—

உயர்நிலைப் பள்ளி

*19047—**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள சேக்குப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலுள்ள சேக்குப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வி, நாள் 4-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாநகரம், அரசியல், ஆன்மீகம், சுற்றுலா மற்றும் பட்டுக்குப் பெயர் பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த மாநகரத்திலே ஏறக்குறைய 2 இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். பெண்களுக்காக அரசு சார்பிலே 2 உயர்நிலைப் பள்ளிகள்தான் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே,